# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 30, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வினாத்தாள் கசிவு உள்பட தேர்வு முறைகேடுகளுக்கு கடுமையான தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே குரல்வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேறியது.

i. சிறப்பம்சங்கள் என்னென்ன?

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி), அரசுப் பணியாளர் தேர்வாணையம் (எஸ்எஸ்சி), ரயில்வே, வங்கி நியமனத் தேர்வுகள், தேசிய தேர்வு முகமையால் (என்டிஏ) நடத்தப்படும் தேர்வுகள் உள்ளிட்ட பொதுத் தேர்வுகளில் முறைகேடுகளைத் தடுக்கும் நோக்கில் கடுமையான பிரிவுகளுடன் 2024-ஆம் ஆண்டின் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் தற்போதைய மசோதாவின் சிறப்பம்சங்கள் வருமாறு:

- தேர்வு வினாத்தாள் கசிவு அல்லது பிற முறைகேடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை. ரூ. 50 லட்சம் வரை அபராதம்.
- குழுவாகத் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் குற்றங்களுக்கு குறைந்த பட்சம் 7 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை. ரூ.10 கோடி வரை அபராதம்.
- 3.தேர்வு முறைகேடு குற்றங்களை விசாரிக்க, எந்தவொரு அமர்வு நீதி மன்றத்தையும் சிறப்பு விரைவு நீதிமன்றமாக நியமிக்க மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அதிகாரம்.
- சிறப்பு விரைவு நீதிமன்றங்களில் தினசரி அடிப்படையில் விசாரணை; குற்றப்பத்திரிகை தாக்கலான நாளில் இருந்து 3 மாத காலத்துக்குள் விசாரணை நிறைவு.
- தேவையின் அடிப்படையில் சிறப்புப் பணிக் குழுவை அமைக்க மத்திய அரசுக்கு அதிகாரம்.
- காவல் துறை, மத்திய முகமைகள், சிறப்புப் பணிக் குழுவின் விசாரணை 2 மாதங்களுக்குள் நிறைவு.
- வழக்குகளில் வாதிட சிறப்பு வழக்குரைகளை நியமிக்க மாநில அரசுகள்

மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அதிகாரம்.

- எந்தவொரு தீர்ப்பு, தண்டனை அல்லது உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வில் மேல்முறையீடு செய்யவும், மூன்று மாத காலத்துக்குள் தீர்வுகாணவும் வழிமுறையை வகுத்தல்.

2. பிரபல குறுஞ்செய்தி பரிமாற்றச் செயலியான டெலிகிராமின் நிறுவனர் பாவெல் துரோவ், ரஷியாவில் பயங்கரவாதச் செயல்களுக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அந்நாட்டு அரசால் தேடப்படும் சர்வதேச குற்றவாளிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

   i. ரஷியாவில் நாசவேலைகள், பயங்கரவாதம், கொலைகள், இணைய மோசடிகளைத் திட்டமிட மற்றும் ஒருங்கிணைப்பதற்கு உக்ரைன் உளவு அமைப்புகள் மற்றும் பயங்கரவாத அமைப்புகளால் டெலிகிராம் பயன்படுத்தப்படுவதாகவும், அதைக் கட்டுப்படுத்த டெலிகிராம் நிர்வாகம் தவறிவிட்டதாகவும் ரஷியாவின் முக்கிய உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பான 'எஃப்எஸ்பி' குற்றஞ்சாட்டியுள்ளது.

3. நாட்டின் ஒட்டுமொத்த தொலைத் தொடர்பு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை, கடந்த ஜூன் மாதத்தில் 134.8 கோடியாக அதிகரித்து, புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

   i. தொலைபேசி பிரிவில் புதிய வாடிக்கையாளர்களைச் சேர்ப்பதில் பார்தி ஏர்டெல் நிறுவனம், தனது போட்டியாளரான ஜியோவை பின்னுக்குத் தள்ளி தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது.

   ii. நாட்டின் ஒட்டுமொத்த அதிவேக இணைய சேவை (பிராட்பேண்ட்) வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மே மாதத்தின் 108 கோடியில் இருந்து, ஜூன் மாதத்தில் 108.75 கோடியாக அதிகரித்துள்ளது.

   iii. நாட்டின் ஒட்டுமொத்த வயர்லெஸ் (தொலைபேசி) வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மே மாதத்தின் 129.4 கோடியிலிருந்து, ஜூன் மாதத்தில் 130 கோடியாக அதிகரித்துள்ளது. இதில் கன்ஸ்யூமர் சிம் (114.7 கோடி), எம்2 எம் சிம் (13.47 கோடி) மற்றும் ஃபிக்ஸட் வயர்லெஸ் இணைப்புகள் (1.78 கோடி) அடங்கும்.

4. பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் பௌலர்

ஜஸ்டின் கிரீவ்ஸ், தொடர்ந்து 5 ஓவர்களை ரன்கள் ஏதும் கொடுக்காமல் மெய்டனாக வீசியதுடன், அந்த ஓவர்களில் தலா 1 விக்கெட்டும் கைப்பற்றி அசத்தினார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இவ்வாறு தொடர்ந்து 5 மெய்டன் ஓவர்களை வீசி, அதில் 5 விக்கெட்டுகளும் எடுத்த முதல் வீரராக அவர் சாதனை படைத்தார்.

5. காமன்வெல்த் போட்டியில் ஆடவருக்கான 10,000 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் 27 நிமிஷம், 49.78 விநாடிகளில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.
    i. பளுதூக்குதலில் மகளிர் 69 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் ஹர்ஜிந்தர் கௌர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

6. நாட்டில் மக்களவை, மாநில பேரவைகள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் வகையில் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' நடைமுறையை அமல்படுத்துவதற்கான மசோதாவை ஆராய்ந்துவரும் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் குளிர் கால கூட்டத் தொடரின் இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
    i. நாட்டில் மக்களவை, பேரவைகள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 129- ஆவது திருத்த மசோதா, யூனியன் பிரதேசங்கள் சட்டத்திருத்த மசோதா ஆகியவை, மக்களவையில் கடந்த 2024-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டன. அறிமுக நிலையிலேயே இந்த மசோதாவுக்கு இண்டி கூட்டணிக் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.
    ii. அதேநேரம், குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னர், பல்வேறு கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்த மசோதாக்கள் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன.
    iii. பாஜக எம்.பி. பி.பி.சௌதரி தலைமையில் 41 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு, மசோதாக்கள் மீதான ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது. 2029-ஆம் ஆண்டுக்குள் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' நடைமுறையை அமல்படுத்துவது தொடர்பாக நாடுதழுவிய ஆலோசனைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

7. மக்களவையில் பிறப்பு, இறப்புப் பதிவு திருத்த மசோதாவை மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் அறிமுகம் செய்தார்.

   i. கடந்த 1969-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிறப்பு, இறப்புப் பதிவு சட்டத்தின்படி, பிறப்பு மற்றும் இறப்புகளைப் பதிவு செய்வது கட்டாயமாகும். இந்தச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள தற்போது பிறப்பு, இறப்புப் பதிவு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

   ii. இந்தப் புதிய மசோதாவின்படி, குழந்தை பிறந்த அல்லது ஒருவர் இறந்த நாளில் இருந்து ஓராண்டுக்கு மேலாகி இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதற்குள், அந்தப் பிறப்பு அல்லது இறப்பைப் பதிவு செய்ய விண்ணப்பிக்கப்பட்டால் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக நடுவரின் உத்தரவு கிடைத்த பிறகே, அவற்றைப் பதிவு செய்ய முடியும்.

   iii. குழந்தை பிறப்பு அல்லது ஒருவரின் இறப்பை பதிவு செய்ய இரண்டு ஆண்டுகளுக்கு மேலானால், அந்தப் பதிவுக்கு கடுமையான ஆய்வு மேற்கொள்ளப்படும். முதல்நிலை குற்றவியல் மாஜிஸ்திரேட் பிறப்பிக்கும் உத்தரவின் அடிப்படையில் மட்டுமே, அந்தப் பதிவு மேற்கொள்ளப்படும். இது பிறப்பு, இறப்பை உரிய நேரத்தில் தெரியப்படுத்தி பதிவு செய்யகுடி மக்களை ஊக்குவிக்கும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. இ20 பெட்ரோலை பயன்படுத்தும் பிஎஸ் 3 வாகனங்களில் சில ரப்பர் பாகங்கள், கேஸ்கட்ஸ் பாகங்களை மாற்றும் நிலை வரக்கூடும் என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

   i. நாடு முழுவதும் உள்ள பெட்ரோல் நிலையங்களில் பெட்ரோலுடன் 20 சதவீத எத்தனால் கலந்து இ20 பெட்ரோல் விற்கப்படுகிறது. இதைப் பயன்படுத்தும் வாகனங்களில் சில பாகங்கள் சேதமடைவதாகவும், 'மைலேஜ்' குறைவதாகவும் தொடர்ந்து சமூக வலைதளங்களில் தகவல்கள் பரவின. இதைச் சுட்டிக்காட்டி, இ20 பெட்ரோல் பயன்பாட்டுக்கு ஏதுவாக தயாரிக்கப்படாத பழைய வாகனங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக மத்திய அரசை எதிர்க்கட்சிகளும், சில நுகர்வோர் அமைப்பினரும் குற்றஞ்சாட்டின. எனினும், இந்தக் குற்றச்சாட்டை மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வந்தது.

   ii. இந்நிலையில், நாடாளுமன்ற மாநிலங்களவையில் இதுகுறித்து எழுப்பப்பட்ட

கேள்விக்கு மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி எழுத்துபூர்வமாக பதில் தாக்கல் செய்துள்ளார். அதில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:

- இ20 பெட்ரோலை பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள்கள், 4 சக்கர வாகனங்களில் (கார்கள் உள்ளிட்டவை) ஏற்படும் பாதிப்புகள் குறித்து இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம், டேராடூன் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பெட்ரோலியம், இந்திய வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பு சங்கம், இந்திய வாகன உதிரிபாகங்கள் ஆய்வு அமைப்பு ஆகியவை கூட்டாக மதிப்பீடுகள் செய்தன. அதில் கார்கள், மோட்டார் சைக்கிள்களின் என்ஜின்களில் மாற்றம் செய்ய வேண்டியதற்கான அவசியமில்லை என்பது தெரிந்தது.
- இ20 பெட்ரோல் பயன்பாட்டால் மைலேஜ் பாதிக்கப்படுமா என்பது குறித்து வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்களும், வாகன என்ஜின் பரிசோதனை அமைப்புகளும் விளக்கியுள்ளன.
- மைலேஜை எரிபொருள் மட்டுமல்ல பிற காரணிகளும் தீர்மானிக்கின்றன என அவை கூறியுள்ளன.
- 2005-ஆம் ஆண்டு ஏப்ரல் 1– ஆம் தேதி முதலும், 2016-ஆம் ஆண்டுக்கு முன்பும் தயாரிக்கப்பட்ட வாகனங்களில் சில ரப்பர் பாகங்கள், கேஸ்கட்ஸ் ஆகிய வற்றை மாற்றும் சூழல் ஏற்படக் கூடும். இதை வழக்கமாக நாம் மேற்கொள்ளும் வாகன சர்வீஸ்களின்போது எளிதில் செய்து விடலாம்.
- இ20 பயன்படுத்துவதால் வாகனம் ஓட்டுவதிலும், அதை 'ஸ்டார்ட்' செய்வதிலும் எந்த பிரச்னைகளும் இருக்காது என நிதின் கட்கரி குறிப்பிட்டுள்ளார்

9. தேசியப்பாடலான 'வந்தே மாதம்' பாடலை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்க வகை செய்யும் மசோதா, மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

i. தேசிய கௌரவம் மீதான அவமதிப்புகள் தடுப்புச் சட்ட திருத்த மசோதா-2026 எனும் அந்த மசோதா,குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. அதேநேரம், தில்லியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் விவகாரத்தை எழுப்பி, எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

ii. தேசிய கௌரவம் மீதான அவமதிப்புகள் தடுப்புச் சட்ட திருத்த மசோதா-2026 இன்படி, தேசிய சின்னங்களான தேசியக் கொடி, அரசமைப்புச் சட்டம், தேசிய கீதம் உள்ளிட்டவற்றுடன் தேசியப் பாடலான வந்தே மாதரத்தை அவமதிப்பதையும் தண்டனைக்குரிய குற்றமாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேசிய கீதத்துக்கு உள்ள அதே சட்டபூர்வ பாதுகாப்பை தேசியப் பாடலுக்கும் வழங்கும் புதிய மசோதாவின்படி, வந்தே மாதரம் பாடல் பாடுவதைத் தடுப்பது, இடையூறு விளைவிப்பது உள்ளிட்ட செயல்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

iii. வந்தே மாதரம் பாடலின் 150-ஆவது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

iv. முன்னதாக, அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களையும் பாட வேண்டும்; முதலில் தேசியப் பாடல், பின்னர் தேசிய கீதம் என்ற வரிசையில் பாட வேண்டும் என்பது உள்ளிட்ட வழிகாட்டுதல்களை மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜனவரியில் வெளியிட்டது.

10. பெட்ரோலில் எத்தனால் கலப்பதற்கான இந்தியாவின் தீவிர முயற்சி மற்றும் அதனால் உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களுக்கு ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க அபாயங்கள்.

i. எரிசக்தி உத்தி

- மேற்கு ஆசியாவில் நிலவும் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் போர்கள் காரணமாக, இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயைச் சார்ந்திருக்கும் தன்மையைக் குறைக்க, மாற்று எரிசக்தி ஆதாரங்களைக் கண்டறிய வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.
- மின்சார வாகனங்கள் நீண்ட காலத் தீர்வாக முன்னிறுத்தப்பட்டாலும், தற்போதுள்ள பெட்ரோல் மற்றும் டீசல் என்ஜின்களில் புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க, எத்தனால் கலப்பு முறையை அரசு தற்போது முன்னெடுத்து வருகிறது.
- எத்தனால் கலந்த எரிபொருட்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் பல வளர்ந்த நாடுகளின் வழியை இந்தியாவும் பின்பற்றுகிறது.

ii. என்ஜின் செயல்பாடு மற்றும் நீர் பயன்பாடு குறித்த கவலைகள்

- எத்தனால் கார் என்ஜின்களில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது குறித்தும், அது எரிபொருள் சிக்கனத்தை (மைலேஜ்) கணிசமாகக் குறைத்து நுகர்வோருக்கான ஒட்டுமொத்த செலவை அதிகரிக்கிறதா என்பது குறித்தும் பரவலான கவலைகளும் விமர்சனங்களும் உள்ளன.
- எத்தனால் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவதால் ஏற்படக்கூடிய கடுமையான நீர் பற்றாக்குறை ஒரு முக்கிய ஆபத்தாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

iii. எத்தனால் உற்பத்திக்கான மூலப்பொருள் பயன்பாடு

- விவசாயம் மற்றும் மரக் கழிவுகளை முதன்மையாகப் பயன்படுத்தும் வளர்ந்த நாடுகளைப் போலன்றி, இந்தியாவில் எத்தனால் உற்பத்தியானது அரிசி, கரும்பு மற்றும் சோளம் போன்ற முக்கிய உணவுப் பயிர்களைச் சார்ந்தே உள்ளது.
- இந்தியா ஆண்டுதோறும் சுமார் 15 கோடி டன் அரிசியையும், 4.30 கோடி டன் சோளத்தையும் உற்பத்தி செய்கிறது.
- எத்தனால் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்ட அரிசியின் அளவு 2024–25-ல் 31.11 லட்சம் டன்னாக இருந்த நிலையில், 2025–26 ஜூன் மாத நிலவரப்படி அது 39.28 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
- எத்தனால் உற்பத்திக்கான சோள ஒதுக்கீடு 2024–25-ல் 1.31 கோடி டன்னிலிருந்து 2025–26-ல் 67.87 லட்சம் டன்னாகக் குறைந்தாலும், முக்கிய உணவான அரிசியை இதற்காகத் திருப்புவது கணிசமாக அதிகரித்துள்ளது.

iv. உணவுப் பாதுகாப்பு மற்றும் எரிபொருள் உற்பத்தி

- தற்போதைய எத்தனால் கலப்பு இலக்குகளைக் குறைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று மத்திய பெட்ரோலியத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி சமீபத்தில் மாநிலங்களவையில் உறுதிப்படுத்தினார்.
- 20 சதவீதத்திற்கும் அதிகமான கலப்பு குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படாத நிலையில், உணவு தானியங்களை இதற்காகத் திருப்புவது பொது விநியோக முறையை (PDS) பாதிக்காது என்று அரசு வலியுறுத்துகிறது.
- அரசின் உறுதியளிப்புகள் இருந்தபோதிலும், அரிசியின் விலை உயர்வு பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.
- தற்போது, இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் எத்தனாலில் 67% அரிசி

மற்றும் சோளத்திலிருந்தும், மீதமுள்ள 33% கரும்புச் சாறு மற்றும் கரும்புச் சர்க்கரைப் பாகிலிருந்தும் (molasses) பெறப்படுகிறது.

v. எத்தனால் உற்பத்தியில் அதிக நீர் பயன்பாடு

பல்வேறு பயிர்களிலிருந்து எத்தனால் தயாரிக்கத் தேவைப்படும் நீர் குறித்த பகுப்பாய்வு:

- இந்தியாவின் நீர் வளங்களில் சுமார் 85% ஏற்கனவே விவசாயத் துறையாலேயே பயன்படுத்தப்படுகிறது.
- 1 கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 3,000 முதல் 5,000 லிட்டர் நீர் தேவைப்படுகிறது.
- 1 லிட்டர் எத்தனால் தயாரிக்க 2.5 முதல் 3 கிலோ அரிசி தேவைப்படுகிறது; அதாவது, அரிசியிலிருந்து பெறப்படும் ஒரு லிட்டர் எத்தனால் உற்பத்திக்கு சராசரியாக 11,250 லிட்டர் நீர் செலவாகிறது.
- கரும்பிலிருந்து 1 லிட்டர் எத்தனால் தயாரிக்க 3,630 லிட்டர் நீர் தேவைப்படுகிறது.
- சோளத்திலிருந்து 1 லிட்டர் எத்தனால் தயாரிக்க 4,670 லிட்டர் நீர் தேவைப்படுகிறது.

vi. பருவநிலை அபாயங்கள் மற்றும் நிலத்தடி நீர் குறைவு

- பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் 'எல் நினோ' (El Nino) விளைவுகள், இந்த ஆண்டு இந்தியாவில் தென்மேற்குப் பருவமழையை வலுவிழக்கச் செய்யலாம் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.
- பருவமழை பொய்த்தால், அது விவசாயத் துறையை மட்டுமல்லாமல், அதைச் சார்ந்திருக்கும் தொழில்துறை பிரிவுகளையும் பாதிக்கும்.
- தென்மேற்குப் பருவமழையில் ஏற்பட்டுள்ள தற்போதைய பற்றாக்குறையால் நீர்நிலைகள் வறண்டு வருகின்றன; இது நிலத்தடி நீரைச் சார்ந்திருக்கும் நிலையை அதிகரிக்கச் செய்யும்.
- முறையற்ற திட்டமிடலுடன் மேற்கொள்ளப்படும் எத்தனால் உற்பத்தியானது நிலத்தடி நீர்மட்டத்தை ஆபத்தான அளவிற்குத் தாழ்த்தி, நீண்டகாலச் சூழலியல் நெருக்கடியை உருவாக்கக்கூடும்.

vii. முடிவுரை

எத்தனால் கலப்பு என்பது ஒரு நவீனத் தேவை என்றாலும், நாட்டின் நீர் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு மதிப்பளிக்கும் வகையிலான முறையான திட்டமிடலுடனேயே அது செயல்படுத்தப்பட வேண்டும்.

11. நீர் பாதுகாப்பில் ஏரிகள் வகிக்கும் முக்கிய பங்கு மற்றும் தமிழ்நாட்டில் அவற்றை மீட்டெடுப்பதன் அவசரத் தேவை குறித்த பகுப்பாய்வு.

i. முக்கியத்துவம் மற்றும் வரலாற்றுப் பின்னணி

- குடிநீர் (மனிதர்கள், பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு) மற்றும் விவசாயத்திற்கு ஏரிகள் இன்றியமையாத நீர் ஆதாரங்களாகும்.
- நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் பராமரிக்கவும் ஏரிகளில் போதுமான நீரைச் சேமிப்பதே முதன்மையான வழியாகும்.
- வரலாற்று ரீதியாக, மக்கள் ஏரிகளை உருவாக்குவதிலும் பராமரிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். நீர்மட்டத்தைக் கண்காணிக்கவும், பருவமழைக் காலங்களில் ஏரிக் கரைகள் உடையாமல் இருப்பதை உறுதி செய்யவும் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
- பாரம்பரியமாக, வண்டல் மண் அகற்றுதல் மற்றும் கரைகளைப் பலப்படுத்துதல் ஆகியவை "குடிமராமத்து" என்று அழைக்கப்பட்ட சமூக-சார்ந்த முயற்சிகளாக இருந்தன.

ii. தமிழ்நாடு மற்றும் சென்னைக்கான முக்கிய புள்ளிவிவரங்கள்

- இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான ஏரிகளைக் கொண்ட இரண்டு மாநிலங்கள் தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தான் ஆகும்.
- தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் 39,202 ஏரிகள் உள்ளன. இவற்றில் 13,710 ஏரிகள் நீர்வளத் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.
- "ஏரிகளின் மாவட்டம்" என்று அழைக்கப்படும் செங்கல்பட்டு மாவட்டத்தில் அதிகபட்சமாக 528 ஏரிகள் உள்ளன.
- 1906-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சென்னையில் 474 ஏரிகள் இருந்தன; இன்று 43 ஏரிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை குடியிருப்புப் பகுதிகள், வணிக வளாகங்கள் அல்லது தொழிற்பேட்டைகளாக மாற்றப்பட்டுவிட்டன.
- வீட்டுவசதி மற்றும் வணிக நோக்கங்களுக்காக "மொகப்பேர் ஏரித் திட்டம்" (Mogappair Lake Project) உருவாக்க, மொகப்பேர் ஏரி முழுமையாக வண்டல் மண் அகற்றப்பட்டு நிரப்பப்பட்டது.

iii. வீராணம் ஏரி

- 10-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர் இராஜாதித்யாவால் வெட்டப்பட்ட வீராணம் ஏரி, சுமார் 15 கிலோமீட்டர் சுற்றளவு கொண்டது.

- இதன் மொத்தக் கொள்ளளவு 1,465 மில்லியன் கன அடி ஆகும்; இது உலகின் மிகப்பெரிய மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் ஒன்றாகும்.
- இது 45,000 ஏக்கர் நிலத்தின் பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, சென்னைக்கு ஒரு முக்கிய குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

iv. ஏரிகள் மற்றும் சதுப்பு நிலங்களுக்கான அச்சுறுத்தல்கள்

- ஏரிகள் பெரும்பாலும் குப்பை மற்றும் கழிவுகளைக் கொட்டும் இடங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- சீமை கருவேலம் (Prosopis juliflora) மற்றும் ஆகாயத் தாமரை போன்ற ஆக்கிரமிப்புத் தாவரங்களால் பல நீர்நிலைகள் அடைபட்டுப் போயுள்ளன.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்பு 15,000 ஏக்கர் பரப்பளவில் இருந்த பள்ளிக்கரணை சதுப்பு நிலம், தற்போது வெறும் 2,500 ஏக்கராகச் சுருங்கியுள்ளது. மழைக்காலங்களில் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கிற்கு இந்தப் பெரும் பரப்பளவு குறைவே முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.
- இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை சராசரியை விட 46% குறைவாகப் பெய்துள்ளது; இதனால் ஏரிகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. மேலும், அதிக வெப்பநிலையால் நீர் வேகமாக ஆவியாவதும் இக்குறைவுக்குக் கூடுதல் காரணமாக அமைந்துள்ளது.

v. முன்மொழியப்பட்ட தீர்வுகள் மற்றும் பொருளாதார ஒப்பீடுகள்

- மழைநீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்க ஏரிகளில் உள்ள வண்டல் மண்ணை அகற்றுவது அரசின் கடமையாகும்; இருப்பினும், இதில் பொதுமக்களின் பங்களிப்பும் மிக அவசியமானதாகும்.
- குறிச்சி கிராமத்தில், கிராம மக்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்து 383 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரியைத் தூர்வாரியதன் மூலம், அதன் நீர் சேமிப்புத் திறன் 93 கோடி லிட்டரிலிருந்து 542 கோடி லிட்டராக அதிகரித்துள்ளது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 ஏரிகளை உருவாக்க அல்லது புனரமைப்பதை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசு "அம்ரித் சரோவர்" (Amrit Sarovar) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கடல்நீரை நன்னீராக்குவது (உப்பு நீக்கம்) மிகவும் அதிகச் செலவு பிடிக்கும் ஒரு செயல்முறையாகும் (தற்போதைய கட்டங்களுக்கு ₹4,276 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது). மழைநீர் கடலில் கலக்கவிட்டு, பின்னர் அதை

நன்னீராக்கப் பல கோடிகளைச் செலவழிப்பதை விட, ஏரிகளைப் பராமரிப்பதற்கு முன்னுரிமை அளிப்பதே நீர் தன்னிறைவை அடைவதற்கான மிகவும் பகுத்தறிவுள்ள மற்றும் சிக்கனமான வழியாகும்.

12. தமிழ்நாட்டில் மதுவினால் ஏற்படும் சமூகத் தாக்கம் மற்றும் முழுமையான மதுவிலக்கை நோக்கிய பொருளாதாரப் பாதை குறித்த பகுப்பாய்வு.

i. சமூகம் மற்றும் தனிநபர்கள் மீதான தாக்கம்
- மது மற்றும் போதைப்பொருள் அடிமைத்தனம் புதிய நோய்கள், கடுமையான சமூகப் பிரச்சினைகள் மற்றும் மனித உயிருக்கு நேரடி அச்சுறுத்தல் ஆகியவற்றை ஏற்படுத்துகின்றன.
- இந்த அடிமைத்தனம் குடும்பக் கட்டமைப்புகளைச் சிதைப்பதோடு, குழந்தைகளின் எதிர்காலத்தையே அர்த்தமற்றதாக்குகிறது.
- பல தலைமுறைகள் ஏற்கனவே மதுவுக்கு அடிமையாகிவிட்ட நிலையில், இது மாநிலத்தின் நலனுக்கு நீண்டகால நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

ii. அரசியலமைப்பு மற்றும் தேசியச் சூழல்
- இந்திய அரசியலமைப்பின் 47-வது பிரிவின் கீழ், மதுவைத் தடை செய்யவும், மதுவிலக்குச் சட்டங்களை இயற்றவும் மாநில அரசுகளுக்கு முழு அதிகாரம் உள்ளது.
- குஜராத், நாகாலாந்து, மிசோரம், பீகார் மற்றும் லட்சத்தீவு யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் மதுவிலக்கு ஏற்கனவே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

iii. தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் வரலாற்றுச் சூழல்
- பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் இருந்த 717 மதுக்கடைகள் மூடப்பட்டது சமீபத்திய ஒரு நேர்மறையான நடவடிக்கையாகக் குறிப்பிடப்படுகிறது.
- எண்ணற்ற ஏழைக்குடும்பங்களைக் காப்பாற்றிய 2003-ஆம் ஆண்டின் லாட்டரிச் சீட்டுத் தடையைப் போலவே, பொது சுகாதாரம் மற்றும் அமைதிக்காக மதுவைத் தடை செய்யவும் அரசு அதே போன்ற துணிச்சலைக் காட்ட வேண்டும்.
- தேர்தல்களுக்கு முன்னதாக மதுவிலக்கு என்பது பெரும்பாலும் ஒரு முக்கிய விவாதப் பொருளாக அமைகிறது; ஆனால் அரசியல் பிரதிநிதிகள் அதிகாரத்திற்கு வந்தவுடன் அது வழக்கமாகப் புறக்கணிக்கப்படுகிறது.

iv. பொருளாதார யதார்த்தம் மற்றும் வருவாய் சிக்கல்

- மாநிலத்திற்கு ஒரு முக்கிய சவாலாக இருப்பது என்னவென்றால், தமிழ்நாட்டின் வருவாயில் சுமார் ஆறில் ஒரு பங்கு (1/6) மது விற்பனை மூலமே கிடைக்கிறது.
- மாநிலத்தின் தற்போதைய நிதி நிலைமை:
- மொத்த வரி வருவாய்: சுமார் ₹3.5 லட்சம் கோடி.
- மொத்தச் செலவு: சுமார் ₹4 லட்சம் கோடி.
- வருவாய் பற்றாக்குறை: சுமார் ₹50,000 கோடி.
- மாநிலத்தின் மொத்தச் செலவில் சுமார் 50% கல்வி, சுகாதாரம், எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற அத்தியாவசியத் துறைகளுக்கு ஒதுக்கப்படுகிறது.
- மாநிலத்தின் வருமானம் மூன்று முக்கியத் தூண்களைச் சார்ந்துள்ளது: வணிக வரிகள் (இது மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான பங்களிப்பை அளிக்கிறது), முத்திரை மற்றும் பதிவுத் துறை, மற்றும் மது விற்பனை.

v. "இலவசத் திட்டங்களின்" நிதிசார் சவால்கள்

நலத்திட்ட வாக்குறுதிகள் மதுவிலக்கைச் செயல்படுத்தும் திறனைப் பாதிக்கின்றன:

- மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்: இதற்கான தற்போதைய ஆண்டு ஒதுக்கீடு ₹15,000 கோடி ஆகும். மாதாந்திர உதவித்தொகையை ₹2,500-ஆக உயர்த்துவதற்கு ஆண்டுக்குக் கூடுதலாக ₹20,000 கோடி தேவைப்படும்.
- சமையல் எரிவாயு (LPG) மானியம்: ஆண்டுக்கு 6 இலவச எரிவாயு உருளைகளை வழங்குவதற்கு ₹8,000 முதல் ₹10,000 கோடி வரை செலவாகும்.
- இத்தகைய கூடுதல் செலவுகள், விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் மின்சாரக் கட்டணச் சலுகைகள் ஆகியவற்றுடன் இணையும்போது, மது விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயைக் கைவிடுவது மாநிலத்திற்குச் சிரமமான சூழலை உருவாக்குகிறது.

vi. வருவாய் இழப்பற்ற மதுவிலக்கை அடைவதற்கான முன்மொழியப்பட்ட வழிமுறை

பிற துறைகளைச் சிறப்பாக நிர்வகிப்பதன் மூலம் மது விற்பனை வருவாய் இல்லாமலே மாநிலத்தால் இயங்க முடியும்:

- வரி விதிக்கக்கூடிய புதிய தொழில் துறைகளைக் கண்டறிதல் மற்றும் வணிக வரித் துறையில் வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகியவற்றின் மூலம், மாநிலம் ஆண்டுக்குக் கூடுதலாக ₹25,000 முதல் ₹35,000 கோடி வரை வருவாய் ஈட்ட முடியும்.
- 2025–26 ஆம் ஆண்டில், முத்திரை மற்றும் பதிவுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் மட்டுமே வருவாயை ₹7,000 கோடி அளவுக்கு அதிகரித்தன.
- அதிக வருவாய் ஈட்டும் துறைகளில் நேர்மையான, அனுபவம் வாய்ந்த மற்றும் புதுமையான சிந்தனை கொண்ட அதிகாரிகளை அரசு நியமிக்க வேண்டும்; அத்துடன் உறுதியான முடிவுகளை எடுப்பதற்கான சுதந்திரத்தையும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.
- மக்கள் வரியைச் சரியாகச் செலுத்தவும், வரி நடைமுறைகளைப் புரிந்துகொள்ளவும் ஏதுவாக வரி விதிப்புக் கொள்கைகள் தெளிவானதாகவும் எளிமையானதாகவும் இருக்க வேண்டும்.

vii. முடிவுரை

மாநிலத்தின் செயல்பாட்டிற்கு மது விற்பனை வருவாய் இன்றியமையாதது என்று கருதுவது தவறான கண்ணோட்டமாகும். "நலத்திட்டங்களுக்காக மது விற்பனை" என்ற அணுகுமுறையைக் கைவிட்டு, நிர்வாகத் திறன் மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று இது வலியுறுத்துகிறது.